# சிறுவர் இலக்கணம்

I

வித்துவான் மு. த. வேலாயுதனார்
எழுதியது

றமிழ்ப் பதிப்பகம்,
புதுச்சேரி.

கே] 1953 [விலை அணா 6.

TB
P.31 N53
86561.

# சிறுவர் இலக்கணம் I

(நான்காம் பதிப்பு)

வித்துவான் மு. த. வேலாயுதனார்

எழுதியது

விலை அணா 6.

உரிமை ஆசிரியர்க்கே

1953

TB
P31
N53

# முன்னுரை

மாணவர்கள் சுலபமாக இலக்கணங் கற்றுகொள்ளு-தற்பொருட்டு, 'சிறுவர் இலக்கணம்' என்னும் இந்நூல் சுருக்கமாகவும், தெளிவாகவும் எழுதப்பட்டுள்ளது. ஒவ்-வொரு பாடத்தையும், நன்குணர்ந்துகொள்வதற் கேற்ற-வாறு தக்க பயிற்சிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண-வர்கள் அப்பயிற்சிகளைத் தவருது எழுதிவந்தால், பயனடை-வர் என்பது திண்ணம்.

நிற்க, இந்நூலில் எழுத்துக்கள், சொற்கள், உருபு-கள் ஆகிய இவற்றைப்பற்றிய இலக்கணக்கதைகள் மூன்று சேர்க்கப்பட்டுள்ளன.

இத்தகைய நூல்களை எழுதுவதற்குப் பேருக்கமளித்து-வரும் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் எல்லார்க்கும் என் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

12, காமாட்சியம்மன் கோயில் வீதி,
புதுச்சேரி.
17—1—52.

மு. த. வேலாயுதன்

8561

# சிறுவர் இலக்கணம் I

## I. எழுத்து

1. தமிழ் இலக்கணம் என்றால் என்ன?

தமிழ்மொழியைப் பிழையில்லாமல் பேசவும் எழுதவும் கற்பிக்கும் நூல் தமிழ்இலக்கணமாம்.

2. தமிழ்எழுத்துக்களை எத்தனை வகையாகப் பிரித்திருக்கின்றனர்?

தமிழ்எழுத்துக்களை நான்கு வகையாகப் பிரித்திருக்கின்றனர்.

3. அவை யாவை?

(1) உயிர் எழுத்து, (2) மெய் எழுத்து, (3) உயிர்மெய் எழுத்து, 4) ஆய்த எழுத்து என்பனவாம்.

### பயிற்சி 1

1. தமிழ்இலக்கணத்தின் உபயோகம் என்ன?
2. எழுத்துக்களை எவ்வாறு பிரித்திருக்கின்றனர்?

### 1 உயிர்எழுத்து

4. உயிர்எழுத்தென்று ஏன் சொல்லுகிறார்கள்?

வேறு எந்த எழுத்தின் உதவியில்லாமலும் தானே ஒலிக்கவல்ல எழுத்தாகையால், உயிர்எழுத்தென்று சொல்லுகிறார்கள்.

5. உயிர்எழுத்து எத்தனை?

உயிர்எழுத்து அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்று பன்னிரண்டு ஆகும்.

6. எல்லாஎழுத்துக்களும் ஒரே அளவான ஓசை யுடையனவா ?

அவற்றை எப்படிப் பிரித்திருக்கின்றனர் ?

அ, இ, உ, எ, ஒ, இவை ஐந்தும் குறுகிய ஓசை யுடையன. இவற்றிற்குக் குறில் என்று பெயர்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ இவை ஏழும் நீண்ட ஓசை யுடையன. இவற்றிற்கு நெடில் என்று பெயர். குறிலைக் குற்றெழுத்து என்றும், நெடிலை நெட்டெழுத்து என்றும் சொல்லலாம்.

7. சுட்டெழுத்தென்றால் என்ன ? சுட்டெழுத்துக்கள் யாவை ?

ஒரு பொருளைச் சுட்டிக்காட்டுதற்கு உபயோகிக்கப்படும் எழுத்துக்குச் சுட்டெழுத்து என்பது பெயர். அ, இ, உ, இந்த மூன்றும் சுட்டெழுத்துக்களாக வரும்.

| | | |
|---|---|---|
| அவன் | இவன் | உவன் |
| அப்பசு | இம்மனிதன் | உவ்வீடு |

8. வினாவெழுத்துக்கள் எவை ?

ஆ, எ, ஏ, ஓ, யா இவை ஐந்தும் வினாப்பொருளை உணர்த்தும்போது வினாவெழுத்தாம்.

| | | | |
|---|---|---|---|
| அவனா | இவளா | அதுவா | (ஆ) |
| எவன் | எது | எவள் | (எ) |
| ஏது | ஏன் | ஏவன் | (ஏ) |
| அவனோ | இவளோ | அதுவோ | (ஓ) |
| யாது | யாவள் | யார் | (யா) |

## பயிற்சி 2

1. உயிர்எழுத்துக்கள் எத்தனை ? 2. உயிர்எழுத்தென்று சொல்வதற்குக் காரணமென்ன ? 3. குற்றெழுத்துக்கள் எத்தனை ? 4. ஓ, என்ன எழுத்து ? 5. அவனா, இப்பசு, ராமனோ, உவ்வீடு, அம்மணி, யாவன், அவள்—

வினாப்பொருளை உணர்த்தும் சொற்களையும், சுட்டுப்பொருளை உணர்த்தும் சொற்களையும் பிரித்தெழுதுக.

| சுட்டு | வினா |
|---|---|
| | |
| | |
| | |

## 2 மெய் எழுத்து

9. மெய்எழுத்து என்று சொல்வதற்குக் காரணமென்ன ?

உயிர்எழுத்துச்சேர்ந்தாலன்றித் தானே ஒலிக்கமுடியாத எழுத்து உயிர் அற்ற எழுத்தாகும். இந்தக் காரணத்தால் அந்த எழுத்திற்கு மெய்எழுத்து என்று பெயர். அவ்வெழுத்தின்மேல் புள்ளி இருக்கும். (மெய் - உடல்.)

10. மெய்எழுத்துக்கள் எத்தனை ?

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் இப்பதினெட்டும் மெய்எழுத்துக்களாம்.

11. மெய்எழுத்துக்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம் ? அவை யாவை ?

மெய்எழுத்துக்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை வல்லினம், மெல்லினம், இடையினம் என்பனவாம்.

இவற்றை வல்லெழுத்துக்கள், மெல்லெழுத்துக்கள், இடையெழுத்துக்கள் என்றும் சொல்லலாம்.

வல்லெழுத்துக்கள் : க், ச், ட், த், ப், ற் என்று ஆறும்.

மெல்லெழுத்துக்கள் : ங், ஞ், ண், ந், ம், ன் என்று ஆறும்.

இடையெழுத்துக்கள் : ய், ர், ல், வ், ழ், ள் என்று ஆறும்.

## பயிற்சி 3

1. மெய்யெழுத்து என்றால் என்ன ?

2. மெய்யெழுத்திற்கு அடையாளம் என்ன ?

3. க், ர், ழ், ஞ், ண், ட், ச், ன், ங், ப், ம் இவை எந்த எந்த இனத்தைச் சேர்ந்த எழுத்துக்கள்?—கீழ்வரும் இன-வரிசையில் எழுதுக.

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

## 3. உயிர்-மெய் எழுத்து

12. உயிர்-மெய் எழுத்துக்கள் என்றால் என்ன ?

உயிர்எழுத்தும் மெய்எழுத்தும் கூடிப் பிறக்கும் எழுத்துக்களே உயிர்-மெய் எழுத்துக்களாம்.

13. உயிர்-மெய் எழுத்துக்கள் எவ்வாறு உண்டா-கின்றன ?

உயிர்எழுத்துக்கள் பன்னிரண்டும், தனித்தனி, ஒவ்வொரு மெய்யின்மேல் ஏறுவதால் உயிர்-மெய் எழுத்துக்-கள் உண்டாகின்றன.

| | |
|---|---|
| க்+அ =க | க்+எ =கெ |
| க்+ஆ =கா | க்+ஏ =கே |
| க்+இ =கி | க்+ஐ =கை |
| க்+ஈ =கீ | க்+ஒ =கொ |
| க்+உ =கு | க்+ஓ =கோ |
| க்+ஊ =கூ | க்+ஔ =கௌ |

இவ்வாறே, ங், ச், ஞ் முதலிய எழுத்துக்களும் உயிர் ஏறப்பெற்று உயிர்மெய் எழுத்துக்களாக மாறும்.

# உயிர்மெய் எழுத்துக்கள்—216

| மெய் | | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | + | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | + | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | + | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | + | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | + | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | + | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | + | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | + | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | + | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | + | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | + | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | + | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | + | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | + | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | + | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | + | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | + | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | + | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

### பயிற்சி 4

1. வல்லின எழுத்துக்கள் ஒவ்வொன்றிலும் ஆ, இ, ஐ, ஒ, ஔ இவற்றைச் சேர்த்தெழுதுக.

2. பட்டு, கை, கண், வாள், நிலம், கல் இவற்றிலுள்ள உயிர்-மெய் எழுத்துக்களைப் பிரித்தெழுதுக.

---

## 4 ஆய்தஎழுத்து

14. ஆய்தஎழுத்து என்றால் என்ன?

ஆய்தஎழுத்து - ஓர் ஆயுத வடிவம்போல் மூன்று புள்ளிகளைப் பெற்றதாம்.

15. ஆய்தஎழுத்து வரும் இடம் எது?

ஆய்தஎழுத்து ஒருசொல்லின் இடையிலே வரும்.

அஃது, இஃது, எஃது.

16. தமிழ்மொழியில் வந்து கலக்கும் சம்ஸ்கிருத எழுத்துக்கள் யாவை?

ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ இவை ஐந்துமாகும்.

ஜலம், புஷ்பம், ஸாக்ஷி, ஹரி, விருக்ஷம்.

### பயிற்சி 5

1. ஆய்தஎழுத்தென்று ஏன் கூறுகிறார்கள்?

2. ஆய்தஎழுத்து வரும் இரண்டு சொற்களை எழுதுக.

3. ஹ, ஷ, க்ஷ இவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பதம் எழுதுக.

---

## இலக்கணக் கதை

### கதை : 1 யார் பெரியவர்?

ஓர் ஊரில் உயிரப்பன், மெய்யப்பன், உயிர்மெய் அப்பன், ஆய்தஅப்பன் என்றும் நான்கு நண்பர் வாழ்ந்து-வந்தனர். அவர்கள் மிகவும் நல்லவர்கள். ஒவ்வொரு-வரும் தங்கள் தங்கள் வேலையை மிக்க கவனமாகச் செய்துவந்தனர்.

ஒருநாள், அவர்களுக்குள் சண்டை உண்டாயிற்று. அப்போது ஒவ்வொருவரும் தாம்தாம் பெரியவர் என்று பேசிக்கொண்டனர். இந்த வழக்கினைத் தீர்த்துக்கொள்ள உலகப்பனிடத்தில் போய் முறையிட்டனர். உலகப்பன் பழங்காலத்து மனிதர். எல்லா விஷயங்களிலும் அவருக்கு நல்ல ஞானம் உண்டு.

ஆகையால், உலகப்பன் முதலில் உயிரப்பனைப் பார்த்து 'நீ உன்னைப் பெரியவனென்று சொல்கின்றாயே! என்ன காரணம்?' என்று கேட்டார். அதற்கு உயிர்-அப்பன் 'ஐயா, நான் எல்லாருக்கும் உயிர் அளிப்பவன். நான் இல்லாவிட்டால் மெய்யப்பனுக்கு மதிப்பேயில்லை. உயிர்மெய்அப்பனுக்கும், ஆய்தஅப்பனுக்குங்கூட நான்-தான் உயிர்நாடி. நான் வாழ்ந்தால்தான் அவர்கள் வாழ முடியும்' என்றார்.

மெய்யப்பன் கூறியதாவது:

"ஐயா! உயிரப்பனுக்குப் பெருமை கொடுக்கின்றவன் நான்தான். என் உதவியால்தான் அவர் அழகாக உலாத்துகிறார். நான் அவருக்கு வாகனமாகவும் உதவுகின்றேன். நாங்கள் இருவரும் சேர்ந்தால், முதலில் என்னைத்தான் சொல்வார்கள். பின்னால் அவர் ஒலி வரும். இதுவே என் பெருமையைக் காட்டும்" என்றார்.

உயிர்மெய்யப்பன் கூறியதாவது:

"ஐயா! உயிரப்பனின் சக்தியும் மெய்யப்பன் சக்தியும் என்னிடத்தில் இருக்கின்றன. அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிய முடியாது. அப்படிப் பிரிந்தால் எல்லோருக்கும் துன்பம் நேரிடும்" என்றார்.

ஆய்தஅப்பன் சொன்னதாவது:

"ஐயா! இந்த உலகத்தில் என் குடும்பம் மிகச் சிறியது; ஆடம்பரமே எனக்கில்லை. ஆனால் சிறப்பாக வாழ்கின்றேன். எனக்கு இந்த மூன்று அப்பன்மார்களும் உதவிபுரிவார்கள். நான் தனியாக எங்கும் சென்றதே இல்லை. நான் புறப்பட நினைத்தால், அவர்கள்

எனக்கு ஆதரவாக முன்னும் பின்னும் நிற்பார்கள். ஆதலால் நானே பெரியவன் " என்றார்.

நான்கு அப்பன்மார்களும் சொல்வதைக் கேட்டிருந்த உலகப்பன் அவர்களைப் பார்த்து " நீங்கள் ஒவ்வொருவரும் உலகத்திற்கு முக்கியமானவர்கள். உங்களுக்குள் சண்டை வேண்டாம். எல்லார் உதவியுந்தான் வேண்டும். உங்களை வெல்ல யாராலும் முடியாது. நீங்கள் ஒவ்வொருவரும் பெரியவர்களே !" என்று கூறி முடித்தார்.

---

## II சொல்

17. சொல் எப்படி வரும் ?

சொல் ஓர் எழுத்தாலும் வரும் ; பல எழுத்துக்கள் சேர்ந்தும் வரும்; ஆனால், ஏதேனும் ஒரு பொருளைத் தர வேண்டும். அதற்கே சொல் என்று பெயர்.

18. தமிழ்மொழியில் எத்தனை வகைச் சொற்கள் உண்டு ? அவை யாவை ?

தமிழ்மொழியில் நான்குவகைச் சொற்கள் உண்டு. அவை :

1. பெயர்ச்சொல்
2. வினைச்சொல்
3. இடைச்சொல்
4. உரிச்சொல்

என்பனவாம்.

### 1 பெயர்ச்சொல்

19. பெயர்ச்சொல் எதை உணர்த்தும் ?

பெயர்ச்சொல் ஒரு பொருளின் பெயரை உணர்த்தும்.

20. பெயர்ச்சொல்லை எத்தனை வகையாகப் பிரித்திருக்கின்றனர் ?

பெயர்ச்சொல்லை ஆறு வகையாகப் பிரித்திருக்கின்றனர். அவை :

1. பொருட்பெயர் 2. இடப்பெயர்
3. காலப்பெயர் 4. சினைப்பெயர்
5. பண்புப்பெயர் 6. தொழிற்பெயர்

என்பனவாம்.

1. பொருட்பெயர் : கல், நாய், மனிதன்
2. இடப்பெயர் : கல்விச்சாலை, வீடு, உலகம்
3. காலப்பெயர் : சனிக்கிழமை, தை, நாழிகை
4. சினைப்பெயர் : விரல், நகம், விழுது
5. பண்புப்பெயர் : நன்மை, தீமை, நலம்
6. தொழிற்பெயர் : போதல், செலவு, பேச்சு

21. பெயர்ச்சொல்லில் என்ன உணரவேண்டும்?

பெயர்ச்சொல்லில் திணை, பால், எண், இடம் வேற்றுமை என்னும் ஐந்து பொருளை உணரவேண்டும்.

## 1 திணை

22. திணை என்பதற்கு என்ன பொருள்?

திணை என்பதற்குக் குலம் என்று பொருள்.

23. அஃது எத்தனை வகைப்படும்?

அது உயர்திணை, அஃறிணை என்று இரண்டு வகைப்படும்.

24. உயர்திணை எவற்றைக் குறிக்கும்?

உயர்திணை, உலகத்தில் வாழும் மக்களையும் தேவர்களையும் குறிக்கும்.

மக்கள் : வீரப்பன், சுந்தரி, தொழிலாளர்.
தேவர்கள் : இந்திரன், சரஸ்வதி, நாரதர்.

25. அஃறிணை எவற்றைக் குறிக்கும்?

அஃறிணை, மக்கள், தேவர் ஆகிய இவர்கள் பெயர்கள் தவிர, மற்றைய உயிருள்ள பொருள்களையும் உயிரற்ற பொருட்களையும் குறிக்கும்.

எருது, பறவை, மண், விளக்கு.

## 2 பால்

26. பால் எத்தனை வகைப்படும்? அவைகள் யாவை?

பால் ஐந்து வகைப்படும். அவை:

ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்பனவாம்.

ஆண்பால் —கந்தன், தலைவன்
பெண்பால் —சீதை, தலைவி
பலர்பால் —தலைவர், தலைவிகள், குடிகள்
ஒன்றன்பால்—மாடு
பலவின்பால்—செடிகள்
ஆண்பால் —ஆணை உணர்த்தும்.
பெண்பால் —பெண்ணை உணர்த்தும்
பலர்பால் —பலபேரைக் காட்டும்.

பலர்பால் ஆண்பாலாகவும் வரும், பெண்பாலாகவும் வரும்; இரண்டு பால்களைக் குறித்தும் வரும்.

ஒன்றன்பால்—ஒன்றை உணர்த்தும்.
பலவின்பால்—பலவற்றை உணர்த்தும்.

ஆண்பால், பெண்பால், பலர்பால் இவை மூன்றும் உயர்திணைக்குரியன.

27. அஃறிணையில் ஆண் பெண் பகுப்பு உண்டா?

சிலவற்றிற்கு உண்டு. சேவல்—பெட்டை; கிடாய்—மறி; களிறு—பிடி; என்ற பகுப்பு உண்டு. ஆனால், அஃறிணைப்பெயர் எல்லாவற்றிற்கும் ஆண், பெண் என்ற பகுப்பு இல்லை.

### பயிற்சி 6

1. பெயர்ச்சொல்லுக்கு மூன்று உதாரணம் எழுதுக.
2. கடல், காகிதம், ஊசி, நாள், வருதல், ஏணி, இலை, கந்தன், நடை, செம்மை, அழகு, வீரம்: இப்பெயர்களைக் கீழ்வரும் அட்ட வணையில் எழுதுக

பொருட்பெயர் :
இடப்பெயர் :
காலப்பெயர் :

சினைப்பெயர் :
குணப்பெயர் :
தொழிற்பெயர் :

3. பெண்பாலுக்கு மூன்று உதாரணமும், பலவின்பாலுக்கு மூன்று உதாரணமும் எழுதுக. 4. வேலைக்காரன், புதியவன், செட்டி, ஆண், மாணவி, ஒருத்தி, தட்டான், உபாத்தியாயினி—ஆண்பாலுக்குப் பெண்பாலும் பெண்பாலுக்கு ஆண்பாலும் எழுதுக.

---

## 3 எண்

28. எண் என்பது என்ன? அதன் வகை யாது?

பொருள்களின் எண்ணிக்கையே எண்ணாகும். அது ஒன்றா, அல்லது ஒன்றுக்கு மேற்பட்டனவா என்பதை உணர்த்தும். ஒன்றை உணர்த்துவது ஒருமையாகும்; பலவற்றை உணர்த்துவது பன்மையாகும்.

ஒருமை : சிறுமி, தேர், ஊர்,
பன்மை : சிறுமிகள், தேர்கள், ஊர்கள்.

ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் இவை மூன்றும் ஒருமைக்கு உரியன.

பலர்பால், பலவின்பால் இவை இரண்டும் பன்மைக்கு உரியன.

## 4 இடம்

29. இலக்கணத்தில் இடம் என்பதற்குப் பொருள் என்ன?

இடம் என்பதற்குப் பொருள், ஒரு சொல், தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூன்று வகைப்பொருளில் ஒன்றை இடமாகக் கொள்வது.

1. பேசுவோன்—தன்மை இடம்
2. முன் நிற்போன்—முன்னிலை இடம்
3. பேசப்படுவோன்—படர்க்கை இடம்

1. தன்மை
   - ஒருமை—யான், நான்
   - பன்மை—
     - யாம், நாம்
     - யாங்கள், நாங்கள்

2. முன்னிலை
   - ஒருமை—நீ
   - பன்மை—நீர், நீங்கள்

3. படர்க்கை
   - ஒருமை—அவன், அவள், அது
   - பன்மை—அவர்கள், அவைகள்

### பயிற்சி 7

1. ஒருமை, பன்மை இவை ஒவ்வொன்றுக்கும் மும்மூன்று உதாரணம் எழுதுக.

2. கீழ்வரும் சொற்கள் குறிக்கும் இடத்தை முறைப்படுத்தி எழுதுக.

நீ, அவைகள், நாங்கள், பெரியோர்கள், நீங்கள், நான், நீர், யாங்கள், சிறுமிகள்.

| தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

## 5 வேற்றுமை

30. வேற்றுமை என்றால் என்ன?

ஏற்ற பெயர்ச்சொல்லின் பொருளை வேற்றுமைப் படுத்துவது வேற்றுமையாம். அஃது எட்டு வகைப்படும்.

### முதல் வேற்றுமை

31. முதல்வேற்றுமை என்றால் என்ன ?

திரிபில்லாத பெயரே முதல்வேற்றுமையாம். முதல்வேற்றுமையை எழுவாய் வேற்றுமை என்றும் சொல்லலாம்.

இராமன் (சென்றான்). விளக்கு (எரிந்தது). மரம் (வளர்கிறது).

இராமன், விளக்கு மரம் திரிபில்லாத பெயர்கள். இவை முதல்வேற்றுமையாம்.

### இரண்டாம் வேற்றுமை

32. இரண்டாம் வேற்றுமையின் உருபு யாது ?

இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ என்பதாம். இதுவே செயப்படுபொருள் வேற்றுமையாகும்.

நான் பாலைப் பருகினேன்.

### பயிற்சி 8

1. முதல்வேற்றுமைக்கு மூன்று உதாரணம் எழுதுக. 2. முதல்வேற்றுமைக்கு வேறு என்ன பெயர் ? 3. மாமன், அத்தை, கை, வேர், உடைகள், கோல்—இச்சொற்களை இரண்டாம் வேற்றுமைஉருபு சேர்த்து எழுதுக.

---

### மூன்றாம் வேற்றுமை

33. மூன்றாம் வேற்றுமை உருபுகள் யாவை ?

மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஆல், ஓடு, உடன் என்பனவாம்.

1. இராமனால் இவ்வேலை செய்யப்பட்டது. (ஆல்)
2. தந்தையோடு மகன் வந்தான். (ஓடு)
3. ஆசிரியருடன் மாணாக்கன் சென்றான். (உடன்)

### பயிற்சி 9

1. கீழ்வருஞ் சொற்கள் ஒவ்வொன்றுடனும் மூன்றாம் வேற்றுமை உருபுகள் சேர்த்து எழுதுக.

கந்தன்; மரம், ஆமை, இரும்பு.

## நான்காம் வேற்றுமை உருபு

34. நான்காம் வேற்றுமையின் உருபு யாது ?

நான்காம் வேற்றுமையின் உருபு கு என்பதாம்.

அழகன் ஏழைகளுக்குச் சோறு போட்டான்.

### பயிற்சி 10

கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள நான்காம் வேற்றுமை உருபேற்ற சொற்களை எடுத்தெழுதுக.

1. உபாத்தியாயருக்குப் புகழ் உண்டு.
2. கிளிக்குச் சிவப்பு அலகு இருக்கிறது.
3. பாக்கு உனக்குத் தெரியுமா ?
4. அக்கரைக்கு இக்கரை பச்சை.

கீழ்வரும் இரண்டாம் வேற்றுமை உருபேறிய சொற்களை, நான்காம் வேற்றுமை உருபு கொடுத்து மாற்றுக.

புத்தகத்தை, கரும்பை, பையனை, கரடியை, பூவை, புதுவையை.

---

## ஐந்தாம் வேற்றுமை

35. ஐந்தாம் வேற்றுமை உருபுகள் யாவை ?

ஐந்தாம் வேற்றுமை உருபுகள் இன், நின்று, இருந்து என்பனவாம்.

1. மலையின் வீழ் அருவி (இன்).
2. இராமன் கல்விச்சாலையினின்று வந்தான் (நின்று).
3. அவன் வீட்டிலிருந்து புறப்பட்டான் (இருந்து).

### பயிற்சி 11

1. காடு, மனை, நிலம் இச்சொற்களுக்கு இன் உருபு கொடுத்து, ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

2. குதிரையினின்று இறங்கினான். கவர்னர் சென்னையிலிருந்து புறப்பட்டார். புதுவையிலிருந்து சென்னை எத்தனை மைல்? கந்தன்தோட்டத்திலிருந்து வந்த சுரைக்காய்.

இவ்வாக்கியங்களில் உள்ள ஐந்தாம் வேற்றுமை உருபேற்ற சொற்களை எடுத்தெழுதுக.

## ஆறும் வேற்றுமை

36. ஆறும் வேற்றுமை உருபுகள் யாவை?

ஆறும் வேற்றுமை உருபுகள் அது, உடைய என் பனவாம்.

கந்தனது பை (அது)
என்னுடைய வீடு (உடைய)

### பயிற்சி 12

1. அவனுக்கு, மரத்திற்கு, நகரத்தார்க்கு, கவிவாண னுக்கு : நான்காம் வேற்றுமை உருபேறிய சொற்களை "அது" உருபேறிய சொற்களாக மாற்றி எழுதுக.

2. மரத்தினால், அன்போடு, இவனுடன் : "உடைய" என்னும் உருபேறிய சொற்களாய் மாற்றி எழுதுக.

---

## ஏழாம் வேற்றுமை

37. ஏழாம் வேற்றுமை உருபுகள் யாவை?

ஏழாம் வேற்றுமை உருபுகள் இல், கண் என்பன வாம்.

வாயில் பற்கள் இருக்கின்றன (இல்)
கந்தன் வீட்டின்கண் இல்லை (கண்)

### பயிற்சி 13

1. வீட்டில் முருகன் இருக்கிறான்.
2. அவன் நாற்காலியில் உட்கார்ந்தான்.
3. நாட்டின்கண் புலவர் வந்தனர்—ஏழாம் வேற்றுமை உருபேற்ற சொற்களை எடுத்தெழுதுக.

---

## எட்டாம் வேற்றுமை

38. எட்டாம் வேற்றுமை உருபுகள் யாவை?

எட்டாம் வேற்றுமை உருபுகள் ஏ, ஆ என்பனவாம்.

(உ-ம்) என் கண்ணே, வா (ஏ)
கண்ணா, கொடு (ஆ)

## பயிற்சி 14

அன்பன், மனிதன், மக்கள், பசு: எட்டாம் வேற்றுமை உருபுகளை ஏற்றி எழுதுக.

---

## கதை 2 : விறகுவெட்டி

ஓர் ஊரில் விறகுவெட்டி ஒருவன் வசித்துவந்தான். அவன் நாள்தோறும் காட்டுக்குச்சென்று விறகு வெட்டிக்கொண்டு வருவான். ஒருநாள், வழக்கம்போல் காலையில் எழுந்தான்; நேரே காட்டிற்குச் சென்றான். ஒரு சிறிய மரம் தழைத்திருந்தது. அம் மரத்தைக் கோடரியால் வெட்டினான்; தலைச்சுமை அளவு விறகு கட்டிக் கொண்டு கடைத்தெருவிற்குச் சென்றான். ஒருவர் விறகு கேட்கவே தலையிலிருந்து கட்டை இறக்கினான். கட்டினது விலை எட்டணா என்று கூறினான்.

ஐந்து வருஷத்துக்குமுன் சண்டைக்குச் சென்றிருந்த அவன்மகன் திடீரென்று அவ்விடத்தில் வந்தான். இதைக் கண்ட விறகுவெட்டி ஓ மகனே என்று கூறிக் கட்டித்தழுவிக்கொண்டான். மகனும் தன் தந்தையைத் தழுவிக்கொண்டு ஆனந்தக்கண்ணீர் விட்டான். பார்த்தவர்கள் எல்லாரும் தகப்பன்-பிள்ளை இவர்களுக்குள் இருக்கும் அன்பைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள்.

---

39. யான் என்பது உருபேற்கும்போது எவ்வாறு திரியும்?

யான் என்பது உருபேற்கும்போது என் எனத் திரியும்.

யான்—என்னை, என்னால், எனக்கு, என்னின், எனது, என்னில்.

40. நாம், யாம் என்பன எவ்வாறு உருபேற்கும்?

நாம், என்பது நம்மை, நம்மால், நமக்கு, நம்மின், நம்மில் என்றும்,

யாம் என்பது எம்மை, எம்மால், எமக்கு, எம்மின், எமது, எம்மில் என்றும் உருபேற்கும்.

41. நீ நீர், என்பன எவ்வாறு உருபேற்கும் ?

நீ என்பது உருபேற்கும்போது உன் என்றும், நீர் என்பது உம் என்றும் திரியும்.

நீ, உன்னை, உன்னால், உனக்கு, உன்னின், உனது, உன்னில்.

நீர், உம்மை, உம்மால், உமக்கு, உம்மின், உமது, உம்மில்.

42. தான், தாம் என்பன உருபேற்றால் எவ்வாறு திரியும் ?

தான் என்பது தன் என்றும், தாம் என்பது தம் என்றும் திரியும்.

தான், தன்னை, தன்னால், தனக்கு, தன்னின், தனது, தன்னில்.

தாம், தம்மை, தம்மால், தமக்கு, தம்மின், தமது, தம்மில்.

குறிப்பு :—நாம்-யாம், நீ-நீர், தான்-தாம், இவைகள் விளி உருபை ஏலா.

43. மகர ஈற்றுப் பெயர்ச்சொற்கள் உருபேற்றால் எப்படி வரும் ?

மகர ஈற்றுப் பெயர்ச்சொற்கள் உருபேற்றால் அம் கெட்டு அத்துச் சாரியை பெறும்.

நிலம், நிலத்தை, நிலத்தால், நிலத்துக்கு, நிலத்தின், நிலத்தினது, நிலத்தில், நிலமே.

குறிப்பு :—"நிலம்" என்ற மகர ஈற்றுச்சொல்லின் ஈற்றிலுள்ள அம் கெடுகிறது. கெடவே, நில் ஆகிறது. இது அத்துச்சாரியை பெற்று நிலத்து என்றாகிப் பின் இரண்டாவது முதலிய உருபு ஏறினால் நிலத்தை, நிலத்தால்....என்றாகிறது.

## பயிற்சி 15

1. கீழ்வரும் சொற்களை ஏற்றவாறு திரித்து 2, 4, 6, 7–ஆம் வேற்றுமை உருபுகளைச் சேர்த்து எழுதுக.

யான், நான், நீ, நீர்.

2. தன்னை, மரத்தை, நம்மை, என்னை : இவற்றை நான்காம் வேற்றுமை உருபேறிய சொற்களாய் மாற்றி எழுதுக.

3. மரத்துக்கு, தனக்கு, உனக்கு, உமக்கு : இவற்றை ஆறும் வேற்றுமை உருபேறிய சொற்களாய் மாற்றி எழுதுக.

44. அகரத்தை ஈற்றிலே உடைய பெயர்ச்சொற்களும், வையீற்றுச்சொற்களும் உருபேற்றால் எவ்வாறாகும்?

அகரத்தை ஈற்றிலே உடைய பெயர்ச்சொற்கள் உருபேற்றால், உருபு ஏற்கும்போது அற்றுச்சாரியை பெறும்.

பல + ஐ = பலவற்றை (பல + அற்று = ஐ)
சில + ஐ = சிலவற்றை சில + அற்று = ஐ)

குறிப்பு :—பல என்னும் பெயர்ச்சொல்லையும் ஐ என்னும் உருபையும் சார்ந்துவந்த "அற்று" சாரியையாகும்.

"அவை" என்னுஞ் சொல்லிலுள்ள வையீறு, உருபு ஏற்கும்போது, வையிலுள்ள ஐ என்பது கெட அற்றுச்சாரியை பெறும்.

அவை + ஐ = அவற்றை (அவ் + அற்று + ஐ)
எவை + ஐ = எவற்றை (எவ் + அற்று + ஐ)

குறிப்பு:—அவை என்பதிலுள்ள வ் நிற்க ஐ கெட்டுவிடுகிறது. அற்றுச் சாரியையுடன் இரண்டாம் வேற்றுமை உருபு ஐ ஏறி, அவற்றை என்றாகிறது.

45. எல்லாம் என்னும் பெயர் உருபேற்றால் எவ்வாறாகும்?

எல்லாம் + ஐ = எல்லாவற்றையும்
(எல்லா + அற்று + ஐ + உம்)

### பயிற்சி 16

1. பல, சில என்னும் சொற்களுடன் மூன்றாம் வேற்றுமை உருபுகளைச் சேர்த்து எழுதுக.

2. பெரியவற்றை, சிறியவற்றை—சாரியையும், உருபையும் பிரித்தெழுதுக.

## 2 வினைச்சொல்

46. வினைச்சொல் என்றால் என்ன ?

பொருளின் தொழிலைத் தெரிவிப்பது வினைச்சொல்லாம்:

கண்ணன் வாசிக்கிறான்.

குறிப்பு :—கண்ணன் பெயர்ச்சொல் ; வாசிக்கிறான் வினைச்சொல். கண்ணன் செய்கின்ற தொழில் என்ன ? வாசித்தல். ஆகையால், வாசிக்கிறான் என்பது வினைச்சொல்லாம்.

### பயிற்சி 17

1. பெயர்ச்சொற்களையும், வினைச்சொற்களையும் எடுத்தெழுதுக.

1. கந்தன் நேற்று வந்தான்.
2. முருகன் ஊருக்குப் போவான்.
3. இந்த வீடு அழகாய் இருக்கிறது.
4. இராமன் ஓடுகிறான்.
5. பட்டான் பறக்கிறது.

| பெயர்ச்சொல் | வினைச்சொல் |
|---|---|
| | |
| | |
| | |

86561

TB
P31 N33

47. வினைச்சொல், பெயர்ச்சொல்லைப்போல், திணை பால் முதலியவற்றைக் காட்டுமா ?

வினைச்சொல் பெயர்ச்சொல்லைப்போல் திணை, பால், எண், இடம் இவற்றைத் தெரிவிப்பதுடன் காலத்தையும் காட்டும்; ஆனால் வேற்றுமையுருபை ஏற்காது.

வேலன் படிக்கின்றான்.

குறிப்பு :—படிக்கின்றான் : உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை ; தொழில் செய்கின்ற நிகழ்காலத்தையும் காட்டுகிறது அறிக.

## காலம்

48. காலம் என்றால் என்ன ?

வினை நிகழும் நேரமே காலமாகும்.

49. காலம் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

காலம் மூன்று வகைப்படும் : அவை இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பனவாம்.

## இறந்த காலம்

50. இறந்தகாலம் என்றால் என்ன ?

செயல் நடந்துவிட்ட காலமே இறந்தகாலமாகும். செய்தேன், கொண்டாய், வந்தான்.

51. இறந்தகாலத்தை எப்படி உணரலாம் ?

இறந்தகாலத்தை, அதன் இடைநிலைகளால் உணரலாம். அவை த், ட், ற், இன் என்பனவாம்.

| | | | |
|---|---|---|---|
| கொய்தான் | கொய் + த் | + ஆன் | (த்) |
| உண்டான் | உண் + ட் | + ஆன் | (ட்) |
| தின்றோம் | தின் + ற் | + ஓம் | (ற்) |
| பேசினீர் | பேசு + இன் | + ஈர் | (இன்) |

குறிப்பு :—கொய்தான் என்பதில் கொய் பகுதி, த் இடை நிலை, ஆன் விகுதியாகும். முதலில் நிற்பது பகுதி, இறுதியில் நிற்பது விகுதி, இடையில் நிற்பதுவே இடைநிலை. இங்கு த் இறந்தகால இடைநிலையாகும்.

## நிகழ்காலம்

52. நிகழ்காலம் என்றால் என்ன ?

செயல் நடக்கின்ற காலமே நிகழ்காலமாகும்.
காண்கின்றேன், எண்ணுகிறான்.

53. நிகழ்கால இடைநிலைகள் யாவை ?

நிகழ்கால இடைநிலைகள் கிறு, கின்று என்பனவாம்.

| | | |
|---|---|---|
| செய்கிறோம் | செய் + கிறு + ஓம் | (கிறு) |
| பேசுகின்றான் | பேசு + கின்று + ஆன் | (கின்று) |

## எதிர்காலம்

54. எதிர்காலம் என்றால் என்ன ?

செயல் நடக்கப்போகும் காலமே எதிர்காலமாகும்.
வருவோம், உண்பான்.

55. எதிர்கால இடைநிலைகள் யாவை ?

எதிர்கால இடைநிலைகள் ப், வ் என்பனவாம்.

| | | |
|---|---|---|
| காண்போம் | காண் + ப் + ஓம் | (ப்) |
| போவான் | போ + வ் + ஆன் | (வ்) |

## பயிற்சி 18

1. பெயர்ச்சொல், வினைச்சொல் இவை இரண்டில், உருபேற்கும் சொல் எது ? 2. இறந்தகால இடைநிலைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் எழுதுக. 3. கீழ்வரும் சொற்களிலுள்ள இடைநிலைகளையும், அவைகள் எந்தக்காலத்தைக் காட்டும் என்பதையும் குறிப்பிடுக : சென்றோம், தின்பீர், வருவான், ஓடினான், காண்போம், பேசுகின்றான், எழுதுகிறீர். 4. போனான், வந்தான், உண்கின்றீர், பேசுகின்றார்கள் : இவற்றை எதிர்காலத்தில் எழுதுக.

## பகுதி

56. வினைச்சொல்லில் பகுதி எங்கே இருக்கும்?

பகுதி வினைச்சொல்லின் முதலில் இருக்கும்.

| | | |
|---|---|---|
| போகின்முன் | பகுதி | போ |
| நடப்போம் | — | நட |
| எழுதினீர் | — | எழுது |
| உண்டார் | — | உண் |

போ, நட, எழுது, உண் பகுதிகளாம். இவற்றை முதல்நிலை என்றும் சொல்லலாம்.

## விகுதி

57. ஒரு வினைச்சொல்லில் விகுதி எங்கே இருக்கும்?

விகுதி வினைச்சொல்லின் இறுதியில் நிற்கும்.

| | | |
|---|---|---|
| வருகின்றாய் | விகுதி | ஆய் |
| போகின்றோம் | — | ஓம் |
| நடப்பீர் | — | ஈர் |
| பேசினான் | — | ஆன் |

ஆய், ஓம், ஈர், ஆன்—விகுதிகளாம். இவற்றை இறுதிநிலை என்றும் சொல்லாம்.

## பயிற்சி 19

1. கீழ்வரும் சொற்களில் உள்ள பகுதிவிகுதிகளை எடுத்தெழுதுக.

கண்டாய், ஓடினீர், பெறுகின்றார், பேசுவோம், வாழ்த்-தினார், சிரிக்கிறார், அழுகிறாள், பற்றினேன்.

2. ஆள், ஓம், ஆய், ஆன், அ, ஈர்

இங்குக் காட்டப்பட்ட ஒவ்வொரு விகுதியும் பொருந்த வினைச்சொல் ஒவ்வொன்று எழுதுக.

## வினைமுற்றுக்கள்

58. வினைச்சொல் எவ்விடங்களில் வரும்?

வினைச்சொல் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடத்திலும் வியங்கோளிலும் ஏவலிலும் வரும்.

| | | |
|---|---|---|
| தன்மை வினை | ஒருமை—எழுதினேன் | (ஏன்) |
| | பன்மை—எழுதினோம் | (ஓம்) |
| முன்னிலை வினை | ஒருமை—செய்தாய் | (ஆய்) |
| | பன்மை—செய்தீர் | (ஈர்) |
| படர்க்கை வினை | ஆண்பால்—சிரித்தான் | (ஆன்) |
| | பெண்பால்—சிரித்தாள் | (ஆள்) |
| | பலர்பால்—சிரித்தார் | (ஆர்) |
| | ஒன்றன்பால்—சிரித்தது | (து) |
| | பலவின்பால்—சிரித்தன | (அ) |
| வியங்கோள் வினை | —வாழ்க — — | (க) |
| ஏவல் வினை | —போ — — | — |

குறிப்பு:—வியங்கோள் மரியாதையான ஏவற்சொல்லாகும். இதன் விகுதி க என்பதாம். செல்க, வருக என்று வரும். வா, போ என்பன ஒருவனை ஏவிச் சொல்லுதற்கு உபயோகப்படும். வினைச்சொல்லின் பகுதியே ஏவலாம். இவைகளெல்லாம் வினைமுற்றுக்கள்.

### பயிற்சி 20

வாழ்கின்றோம், செல்கின்றாள், செல், உண்டீர், நடக்கின்றாய், வெல்க—இவை என்ன வினை என்பதைக் குறிப்பிடுக.

---

59. வேறு வினைமுற்றுக்கள் உண்டா?

உண்டு. அவை தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை, செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றாவினை என்பனவாம்.

செய்தேன் — தன்வினை
செய்வித்தேன் — பிறவினை
வண்டி ஓட்டினேன் — செய்வினை
சுதந்திரம் மக்களால் அடையப்பட்டது—செயப்பாட்டுவினை

நடந்தேன் — செயப்படுபொருள் குன்றியவினை
பேசினோம் — செயப்படுபொருள் குன்றாவினை

60. வினைக்குறைவுபட்ட சொற்களுக்கு என்ன பெயர்?

வினைக்குறைவுபட்ட சொற்களுக்கு எச்சம் என்று பெயர். அதாவது குறைச்சொல்லாகும். எச்சம்—திணை, பால், இடம் ஆகிய இவற்றைக் காட்டாது.

செய்த, நடந்து, போய்.

61. எச்சம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

எச்சம் இரண்டு வகைப்படும். அவை பெயரெச்சம், வினையெச்சம்.

பெயரெச்சம் பெயரைக்கொண்டு முடியும்.
செய்த மனிதன், உண்ட பிள்ளை.
வினையெச்சம் வினையைக்கொண்டு முடியும்.
செய்து வந்தான். உண்டு போனான்.

62. வினைமுற்றுப்போல், பெயரெச்சம் காலத்தைக் காட்டுமா?

பெயரெச்சம் மூன்று காலத்தையுங் காட்டும். அவை இறந்தகாலப் பெயரெச்சம், நிகழ்காலப் பெயரெச்சம், எதிர்காலப் பெயரெச்சம் என்பனவாம்.

செய்த பிள்ளை — இறந்தகாலம்
செய்கின்ற பிள்ளை — நிகழ்காலம்
செய்யும் பிள்ளை — எதிர்காலம்

வினையெச்சமும் மூன்று வகைப்படும். அவை இறந்தகால வினையெச்சம், நிகழ்கால வினையெச்சம், எதிர்கால வினையெச்சம் என்பனவாம்.

### இறந்தகால வினையெச்சம்

செய்து வந்தான் (உ)
பாடிச் சென்றான் (இ)
போய் உண்டான் (ய்)

இவை இறந்தகால வினையெச்சமாகும். இவற்றின் விகுதி உ, இ, ய் என்பனவாம்.

### நிகழ்கால வினையெச்சம்

உண்ணச் சென்றான் (அ)

இது நிகழ்கால வினையெச்சம். இதன் விகுதி அ என்பதாம்.

### எதிர்கால வினையெச்சம்

செய்யின் கொடுப்பேன் (இன்)
உண்டால் வருவான் (ஆல்)
செய்தக்கால் வருவோம் (கால்)

இவை எதிர்கால வினையெச்சங்களாகும். இன், ஆல், கால் என்பன எதிர்கால வினையெச்ச விகுதி-களாகும்.

63. எதிர்மறை வினையெச்சம் எப்படி வரும்?

எதிர்மறை வினையெச்சம் ஆது, ஆமல், ஆமே என்பனவற்றில் ஏற்ற ஒன்றை ஈற்றில் பெற்றுவரும்.

செய்யாது போனான் (ஆது)
செய்யாமல் வந்தான் (ஆமல்)
செய்யாமே சென்றான் (ஆமே)

குறிப்பு :—எதிர்மறை என்றால் வினையை மறுத்துக் கூறுவது. உடன்பட்டுக் கூறுவதற்கு உடன்பாடு என்று பெயர். செய்கிறேன் உடன்பாட்டு வினை ; செய்யேன் எதிர்மறை வினை.

### பயிற்சி 21

1. இறந்தகாலப் பெயரெச்சத்திற்கு இரண்டு உதாரணமும், எதிர்காலப் பெயரெச்சத்திற்கு மூன்று உதாரணமும் எழுதுக.

2. வந்தால் கொடுப்பேன்; பாடிச்சென்றான்; கொடுத்தக்கால் போவேன்—இச்சொற்றொடர்களில் உள்ள எச்சங்கள் என்னென்ன காலத்தைக் காட்டுகின்றன?

3. புரியாத, நில்லாது, வந்தக்கால்—இவற்றின் பகுதி விகுதிகளை எழுதுக.

---

## 3. இடைச்சொல்

64. பெயர்வினைகளை அடுத்துவரும் சொல்லுக்கு என்ன பெயர்?

பெயர்வினைகளை அடுத்துவரும் சொல்லுக்கு இடைச்சொல் என்று பெயர்.

கந்தனும் இராமனும் : உம் இடைச்சொல்.

65. வேறு இடைச்சொற்கள் யாவை?

ஐ, ஆல், கு, இன், அது, கண், ஆள், அத்து, போல, அ, எ முதலியனவாம்.

## 4. உரிச்சொல்

66. உரிச்சொல் என்றால் என்ன? அஃது எத்தனை வகைப்படும்?

பெயர்ச்சொல் வினைச்சொல் இவைகளைவிட்டு நீங்காமல் உரிமை பூண்டு நிற்கும் சொல் உரிச்சொல்லாம்.

67. உரிச்சொல் இரண்டு வகைப்படும்.

பெயருரிச்சொல், வினையுரிச்சொல் என்பனவாம்.

பெயருரிச்சொல்—நனிபேதை (நனி)

வினையுரிச்சொல்—மிகத்தின்றான். (மிக)

## பயிற்சி 22

பெயருரிச்சொல், வினையுரிச்சொல் இவைகள் ஒவ்வொன்றுக்கும் மூன்று உதாரணந் தருக.

## கதை 3: நான்கு பிள்ளைகள்

தமிழ்த்தாய்க்கு பிள்ளைகள் நால்வர். அவர்களுடைய பெயர்: பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல். இவர்கள் ஒவ்வொருவரும் மிகுந்த திறமையுடையவர்கள்; ஒருவர்க்கொருவர் உதவி செய்துகொள்வார்கள்.

பெயர்ச்சொல் உலகத்தில் முதல்முதல் தோன்றிய பிள்ளை. மக்களைச் சுலபமாகப் பேசவைத்தது அந்தப் பிள்ளைதான்.

வினைச்சொல் பெயர்ச்சொல்லுக்கு அடுத்துப் பிறந்தது. பெயர்ச்சொல்லின் வேலையைச் செய்வதற்கு வினைச்சொல் முக்கியமானது. இதற்குத்தான் நல்ல அனுபவம் உண்டு. பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் பொருத்தமான முறையில் வாழ்கின்றன.

இடைச்சொல் பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சேர்ந்து வாழும். தனியாய் வாழ்வதற்கு அதனல் முடியாது. ஆனல் பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சேர்ந்து அவைகளுக்கு நல்ல பெருமையை அளிக்கிறது. அது பெயர்ச்சொல் குடும்பத்திலும் சேராது; வினைச்சொல் குடும்பத்திலும் சேராது.

உரிச்சொல் இடைச்சொல்லைப்போலன்று. பெயர்ச்சொல்லையும் விசேடித்துவரும்; வினைச்சொல்லையும் விசேடித்துவரும்; மேலும் அந்த இரண்டிற்குமே உரிமையாய் வரும்; இந்த உரிமையைப்பற்றியே உரிச்சொல் என்று பெயர்பெற்றது.

ஆகையால், தமிழன்னையின் பிள்ளைகளாகிய பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொற்கள் எந்தக் காரியத்திலும், ஒற்றுமையுடன் இருந்து தங்கள் குடும்பத்தின் புகழை ஓங்கச் செய்கின்றன.

---

## III. சொல்லிலக்கணம்

68. சொல்இலக்கணம் என்றால் என்ன ?

சொல்லிலக்கணம் என்பது ஒரு சொல்லின் திணை, பால், எண், இடம், வேற்றுமை, முடிபு ஆகியவற்றை விளக்குவது.

69. இராமன் வந்தான்—சொல்இலக்கணம் கூறுக.

இராமன்—உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை, எழுவாயாக வந்தது.

வந்தான்—உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை, நிகழ்காலத் தெரிநிலைவினைமுற்று ; இராமன் என்ற எழுவாய்க்குப் பயனிலையாக வந்தது.

## IV. உறுப்பிலக்கணம்

70. உறுப்பிலக்கணம் என்றால் என்ன ?

பிரிக்கக்கூடிய சொல்லின் பற்பல உறுப்புக்களைப் பிரித்துக் காட்டுவது.

71. உண்டான் இதற்கு உறுப்பிலக்கணம் என்ன ?

உண்டான்—உண் + ட் + ஆன்

உண் : பகுதி

ட் : இறந்தகால இடைநிலை

ஆன் : விகுதி.

### பயிற்சி 23

1. கீழ்வரும் சொற்களுக்குச் சொல்லிலக்கணம் எழுதுக.

செய்வோம்; வருவீர்; நம்பி வருவான்; நான் செய்கின்றேன்.

2. கீழ்வரும் சொற்களுக்கு உறுப்பிலக்கணம் எழுதுக.

அறிகிறான், தின்றான், ஓடினான், செய்கிறார், காண்போம்.

---

## V. வாக்கியம்

72. வாக்கியம் என்றால் என்ன ?

சொற்கள் தொடர்ந்து, கருத்து முற்றுப்பெற்றால் வாக்கியமாம்.

73. 'இராமன் நேற்றுச் சென்னையிலிருந்து': இது வாக்கியமாகுமா ?

ஆகாது. சொற்கள் தொடர்ந்திருந்தபோதிலும் வாக்கியம் முற்றுப் பெறவில்லை.

74. முற்றுப்பெறுவதற்கு என்ன வேண்டும் ?

முற்றுப்பெறுவதற்கு வினைமுற்று வேண்டும். 'இராமன் நேற்றுச் சென்னையிலிருந்து வந்தான்' என்று சொன்னால் வாக்கியம் முற்றுப்பெறும்.

"வந்தான்" என்பது வினைமுற்றாகும்.

75. ஒரு வாக்கியத்தில் என்னென்ன உறுப்புக்கள் இருக்கவேண்டும் ?

ஒரு வாக்கியத்தில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் இருக்கவேண்டும்.

எழுவாய், செய்பவன் ; பயனிலை, அவன் செய்யும் தொழில்; செயப்படுபொருள், எழுவாய் செய்கின்ற காரியத்தை அடையும் பொருள்.

76. 'கந்தன் பால் பருகினுன்' என்னும் வாக்கியத்தில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் கூறுக.

கந்தன்—எழுவாய், இவனே பருகின தொழிலைச் செய்தவன்.

பருகினுன்—பயனிலை. கந்தனுல் செய்யப்பட்ட தொழிலாகும்.

பால்—செயப்படுபொருள். இது கந்தன் தொழில் செய்வதற்கு உண்டான பொருள்.

77. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் இவற்றைக் கேள்விமூலம் எவ்வாறு அறியலாம்?

பருகினவன் எவன்? என்ற கேள்விக்குக் கந்தன் என்ற எழுவாய் விடையாக வரும்.

கந்தன் என்ன செய்தான்? என்ற கேள்விக்குப் பருகினுன் என்ற பயனிலை விடையாக வரும்.

எதைப் பருகினுன்? என்ற கேள்விக்குப் பால் என்ற செயப்படுபொருள் விடையாக வரும்.

78. வாக்கியத்தில் வினைமுற்று எத்தனை வரும்?

வாக்கியத்தில் ஒரே வினைமுற்று வரும். ஆனுல் அது பல வினைச்சொற்களைத் தொடர்ந்து வரலாம்.

'முருகன் எங்கே போகிருன்?' இந்த வாக்கியத்தில், "போகிருன்" வினைமுற்ருகும். அதுவே பயனிலையும் ஆகும். 'முருகன் வீட்டிற்குச் சென்று தன் தாயை அழைத்துக்கொண்டு கடைக்குப் புறப்பட்டான்'—இந்த வாக்கியத்தில் சென்று, அழைத்துக்கொண்டு, புறப்பட்டான் என்ற மூன்று வினைச்சொற்கள் இருக்கின்றன. இவற்றுள் புறப்பட்டான் என்பதே வாக்கியம் முடிவதற்கேற்ற வினைச்சொல்லாம். அந்த வினைச்சொல்லையே வினை-முற்று என்று சொல்லவேண்டும்.

79. எழுவாய் இல்லாமல் வாக்கியம் வருமா ?

எழுவாயின்றி வாக்கியமில்லை. ஆனால், அது வெளிப்படையாய் வாராமல் மறைந்து நிற்பதும் உண்டு. 'நான்கு மணிக்கு இங்கு வருவான்.' இந்த வாக்கியத்தில் எழுவாய் மறைந்திருக்கிறது. எவன் வருவான் ? என்ற கேள்வி கேட்டால் "அவன்" என்று விடைவரும். எனவே, "அவன்" தோன்றா எழுவாயாகும்.

80. ஒரு வாக்கியத்தில் பல எழுவாய்கள் வருமா ?

வரும். "கோபாலனும் அழகனும் கல்விச்சாலைக்குப் போகிறார்கள்" என்ற வாக்கியத்தில், கோபாலன் அழகன் என்ற இரண்டு எழுவாயும், "போகிறார்கள்" என்ற ஒரே பயனிலையும் வந்தன.

81. ஒரு வாக்கியத்தில் செயப்படுபொருள் அவசியம் வரவேண்டுமா ?

செயப்படுபொருள் அவசியம் இருக்கவேண்டும் என்ற நியதி இல்லை. சில வாக்கியங்களில் செயப்படுபொருள் இராது.

'நான் என் வேலையைச் செய்கிறேன்'—இந்த வாக்கியத்தில் "வேலையை" என்ற சொல் செயப்படுபொருளாகும்.

"நான் வீட்டிற்குச் சென்றேன்"—இவ்வாக்கியத்தில் செயப்படுபொருள் இல்லை.

82. செயப்படுபொருள் குன்றா வினை, செயப்படுபொருள் குன்றிய வினை என்றால் என்ன ?

செயப்படுபொருள் குன்றாவினை யென்பது, செயப்படுபொருளைக் கொள்ளும் வினைச்சொல் ஆகும்.

நான் பழம் சாப்பிடுகிறேன்.

செயப்படுபொருள் குன்றிய வினையென்பது, செயப்படுபொருளைக் கொள்ளாத வினைச்சொல்லாகும்.

கண்ணன் நன்றாய் நடக்கின்றான்.

83. செயப்படுபொருள் குன்றா வினையையும் செயப்படுபொருள் குன்றிய வினையையும் எவ்வாறு உணரலாம்?

ஒன்றைச் சாப்பிடுகின்றேன், ஒன்றை எண்ணுகின்றேன், ஒன்றைச் செய்கின்றேன் என்று சொல்லலாம். ஆனால், ஒன்றை நடக்கின்றேன், ஒன்றைத் தூங்குகின்றேன், ஒன்றை ஓடுகின்றேன் என்று சொல்லமுடியாது. ஆகையால், சாப்பிடுகின்றேன், எண்ணுகின்றேன், செய்கின்றேன் என்ற சொற்கள் செயப்படுபொருள் குன்றா வினையாகும். நடக்கின்றேன், தூங்குகின்றேன், ஓடுகின்றேன் என்ற சொற்கள் செயப்படுபொருள் குன்றிய வினையாகும்.

84. பயனிலை வினைச்சொல்லாகத்தான் இருக்கவேண்டுமா?

பயனிலை பெயர்ச்சொல்லாகவும் வரும். இதற்குப் பெயர்ப்பயனிலை என்று பெயர்.

அவன் என் நண்டன்.

நண்பன்—பெயர்ப்பயனிலை.

குறிப்பு :—அவன் வந்தான் என்ற வாக்கியத்திலுள்ள வந்தான் என்ற வினைமுற்று வினைப்பயனிலையாகும்.

## பயிற்சி 24

1. என் தகப்பனார் நாளை ஊருக்குச் செல்வார்; எங்கள் உபாத்தியாயர் மிகவும் நல்லவர்—இவ்வாக்கியங்களில் உள்ள எழுவாய் பயனிலைகளை எடுத்தெழுதுக.

2. இரண்டு வினைச்சொற்களும் ஒரு வினைமுற்றும் வரும் வாக்கியம் இரண்டெழுதுக.

3. செயப்படுபொருள் குன்றா வினை, செயப்படுபொருள் குன்றிய வினை: இவை ஒவ்வொன்றுக்கும் இரண்டிரண்டு வாக்கியம் எழுதுக.

4. அவன் பெரியவன் ; கண்ணன் விளையாடுகிறான் ; இஃது என் வீடு ; மக்கள் சிந்திக்கிறார்கள் ; நாளை வருவேன்.

இவ்வாக்கியங்களில் உள்ள வினைப்பயனிலைகளையும், பெயர்ப்பயனிலைகளையும் எடுத்தெழுதுக.

---

## VI. புணர்ச்சி

85. புணர்ச்சி என்பதென்ன ? அஃது எத்தனை வகைப்படும் ?

நிலைமொழியிலுள்ள ஈற்றெழுத்தும் வருமொழியிலுள்ள முதலெழுத்தும் ஒன்றுசேரப் புணர்வது புணர்ச்சியாம். இதைச் சந்தியென்றும் சொல்லலாம். புணர்ச்சி—இயல்பு புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி என இருவகைப்படும்.

86. இயல்பு புணர்ச்சி என்றால் என்ன ?

நிலைமொழியிலுள்ள ஈற்றெழுத்தும் வருமொழியிலுள்ள முதலெழுத்தும் சேரும்போது, எவ்வித விகாரமுமின்றி ஒன்றுவது இயல்பு புணர்ச்சியாம்.

சிறிய + பையன் : சிறிய பையன்.
மரம் + வளர்கிறது : மரம் வளர்கிறது.

குறிப்பு :—நிலைமொழி யென்றால் முதலில் காணப்படும் சொல் ; வருமொழி என்றால் எந்த மொழி ஒன்றுசேர வருகின்றதோ அந்த மொழி. "சிறிய பையன்" என்பதில் சிறிய : நிலைமொழி ; பையன் : வருமொழி.

87. விகாரப் புணர்ச்சியாவது யாது ? அஃது எத்தனை வகைப்படும் ?

நிலைமொழியீறும் வருமொழி முதலும் புணரும்போது ஓர் எழுத்துத் தோன்றுதலும், கெடுதலும், திரிதலும் நேர்ந்தால், அது விகாரப் புணர்ச்சியாகும். அது மூன்று வகைப்படும் :

## 1. தோன்றல் விகாரம்

அந்த + பையன் = அந்தப் பையன். "ப்" தோன்றியதால், தோன்றல் விகாரமாம்.

## 2. திரிதல் விகாரம்

கல் + கோயில் = கற்கோயில். நிலைமொழியிலுள்ள "ல்" வருமொழியின் முதலெழுத்தை நோக்க, "ற்" ஆகத் திரிந்தது.

## 3. கெடுதல் விகாரம்

நிலம் + வலயம் : நிலவலயம். நிலைமொழியிலுள்ள "ம்" வருமொழியின் முதலெழுத்தை நோக்க, கெட்டது.

88 நிலைமொழியீற்றிலுள்ள இ ஈ ஐ என்னும் எழுத்துக்களுக்குப்பின் உயிர்வரின், இடையில் எந்த மெய் தோன்றும்?

நிலைமொழியீற்றிலுள்ள இ ஈ ஐ என்னும் எழுத்துக்களுக்குப்பின் உயிர்வரின் இடையில் யகர மெய் தோன்றும்.

மணி + அழகு = மணியழகு
தீ + எழுந்தது = தீயெழுந்தது
நகை + இல்லை = நகையில்லை.

89. ஏகாரத்திற்குப்பின் உயிர் வந்தால் எப்படிப் புணரும்?

ஏகாரத்திற்குப்பின் உயிர் வந்தால், சிலவிடத்தில் யகரமும், சிலவிடத்தில் வகரமும் தோன்றும்.

பொன்னே + அழகு = பொன்னேயழகு
சே + அடி = சேவடி.

90. மற்ற உயிர்களுக்குப்பின் உயிர்வந்தால், எவ்வாறு புணரும்?

அ, ஆ, உ, ஊ, எ, ஒ, ஓ, ஔ என்னும் எட்டெழுத்துக்களுக்குப்பின் உயிர் வந்தால் இடையில் வகரமெய் தோன்றும்.

1. மிக்க + அன்பு = மிக்கவன்பு
2. நிலா + அழகு = நிலாவழகு
3. திரு + அடி = திருவடி
4. பூ + அணிந்தான் = பூவணிந்தான்
5. எ + அளவு = எவ்வளவு
6. நொ + அழகா = நொவ்வழகா
7. கோ + அழகு = கோவழகு
8. கௌ + அழகு = கௌவழகு.

91. அந்த, இந்த, எந்த என்னும் சொற்களுக்குப் பின் வரும் க், ச், த், ப் எவ்வாருகும்.

அந்த, இந்த, எந்த என்னும் சொற்களுக்குப் பின் வரும் க், ச், த், ப் மிகும்.

அந்த + பிள்ளை = அந்தப் பிள்ளை
இந்த + பறவை = இந்தப் பறவை
எந்த + செடி = எந்தச் செடி.

92. அ, இ, உ என்னும் மூன்று சுட்டுச்சொல் முன்னும், எ என்னும் வினச்சொல் முன்னும் உயிர் வந்தால் எவ்வாறு புணரும் ?

அ, இ, உ என்னும் மூன்று சுட்டுச்சொல்முன்னும், எ என்னும் வினச்சொல்முன்னும் உயிர் வந்தால் வகரந் தோன்றும்.

அ + அணி = அவ்வணி
இ + எறும்பு = இவ்வெறும்பு
உ + எருது = உவ்வெருது
எ + இடம் = எவ்விடம்.

93. தனிக்குறிலை அடுத்துவந்த மெய்யெழுத்துக்கு- முன் உயிர் வந்தால், எவ்வாருகும் ?

தனிக்குறிலை அடுத்துவந்த மெய்யெழுத்துக்குமுன் உயிர் வந்தால், அம்மெய்யெழுத்து இரட்டும்.

கல் + எறிந்தான் = கல்லெறிந்தான்.

94. மொழியீற்றிலுள்ள மகரத்திற்குமுன் க, ச, த வந்தால் எவ்வாறுகும் ?

மொழியீற்றிலுள்ள மகரத்திற்குமுன் க, ச, த வந்தால் முறையே ங, ஞ, ந ஆகத் திரியும்.

பணம் + கண்டெடுத்தான் = பணங்கண்டெடுத்தான்
புறம் + சென்றுன் = புறஞ்சென்றுன்
இனம் + தூய்மை = இனந்தூய்மை.

95. லகார ளகாரத்திற்குமுன் வல்லினம் வந்தால் எவ்வாறும் ?

லகார ளகாரத்திற்குமுன் வல்லினம் வந்தால், முறையே றகாரமாகவும், டகாரமாகவும் திரியும்.

கல் + குறை = கற்குறை
முள் + குறை = முட்குறை

96. னகர லகரங்கள்முன் வரும் தகர நகரமும், ணகர ளகரமுன் வரும் தகர நகரமும் எவ்வாறும் ?

னகர லகரங்கள்முன் வரும் தகர நகரங்கள் முறையே றகரமாகவும், னகரமாகவும் திரியும்.

பொன் + தீது = பொன்றீது
பொன் + நன்று = பொன்னன்று

ணகர ளகரமுன் வரும் தகர நகரங்கள் முறையே டகரமாகவும், ணகரமாகவும் திரியும்.

மண் + தீது = மண்டீது
முள் + நன்று = முண்ணன்று.

## பயிற்சி 25

1. இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி இவை ஒவ்வொன்றுக்கும் மும்மூன்று உதாரணம் எழுதுக. 2. இந்தக் குருவி, நிலவலயம், பற்பொடி இவை என்ன விகாரம் ? 3. பலாவழகு, புளியிலே, திருவடி, கோயில், விளவழகிது- பிரித்துக்காட்டிப் புணர்ச்சிவிதி கூறுக.

4. பல் + ஒடிந்தது
   கல் + தூண்
   பல் + பொடி
   நிறம் + தூய்மை
   மண் + எடுத்தான்
   உள் + நயம்

இச்சொற்களைச் சந்தி சேர்த்து எழுதுக.

7B
P31 N53

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-14

## இந்நூலாசிரியர் எழுதிய நூல்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பிரஞ்சுக் கணிதம் | 0 | 5 | |
| 2. | கணித நூல் (Manuel d' Arithmetique) | 0 | 12 | |
| 3. | Language et Vocabulaire (C. P.) | 1 | 0 | 0 |
| 4. | சிறுவர் இலக்கணம் II | 0 | 8 | 0 |
| 5. | இலக்கணச்சுடர் | 0 | 12 | 0 |
| 6. | மகாத்மா காந்தி | 0 | 3 | 0 |
| 7. | கதை அமுதம் முதற் புத்தகம் | 0 | 1 | 0 |
| 8. | ,, இரண்டாம் புத்தகம் | 0 | 1 | 0 |
| 9. | ,, மூன்றாம் புத்தகம் | 0 | 1 | 0 |
| 10. | ,, நான்காம் புத்தகம் | 0 | 1 | 0 |
| 11. | சிறுவர் விஞ்ஞானம் | 0 | 4 | 0 |
| 12. | தமிழ் அமுதம் (உரை நடையும் மொழித் தொகுதியும்) | 0 | 5 | 0 |
| 13. | செய்யுட் கொத்து (C. E.) | 0 | 5 | 0 |
| 14. | சரித்திரம் | 0 | 8 | 0 |
| 15. | பூகோளம் I (C. P.) | 0 | 5 | 0 |
| 16. | பூகோளம் II (C. E. & C. M.) | 0 | 10 | 0 |
| 17. | பொருட்பாடம் | 0 | 6 | 0 |
| 18. | அறநூல் (Morale C. P.) | 0 | 8 | 0 |
| 19. | வள்ளுவர் கண்ட நாடு (Approved by the Text Book Committee) | 0 | 12 | 0 |
| 20. | சரித்திரம் (C. S.) | அச்சில் | | |
| 21. | எசோப் இயம்பிய சிறுகதைகள் | அச்சில் | | |

## கூட்டாசிரியராயிருந்து எழுதியவை:

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | சிறுவர் நீதிச் செய்யுட்கொத்து (C. P.) | 0 | 4 | 6 |
| 2. | Language et Vocabulaire (C. E.) | 1 | 0 | 0 |

## வெளிவரப்போகும் நூல்கள்.

1. புரட்சி வீரர் ருஸ்ஸோ (J.J. Rousseau)
2. அழகன் (Secomte de Monte- Cristo)